**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்), தென்காசி**

**முன்னிலை.- திரு. எஸ். மனோஜ்குமார், எம்.ஏ., எம்.எல்.,**

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, தென்காசி.**

**2026 ம் வருடம் மார்ச் திங்கள் 18 ம் நாள் புதன்கிழமை**

**அமர்வு வழக்கு எண். 230/2019**

**(CNR No.TNTS01-000098-2019)**

(ஆலங்குளம் நீதித்துறை நடுவர் திரு.தி.பிச்சைராஜன், பி.காம்., எல்.எல்.பி., அவர்களால் முதல்நிலை விசாரணை பதிவேட்டு வழக்கு எண் 12/2018 ஆனது 11.03.2019 ம் தேதியன்று மேல்விசாரணைக்கு அனுப்பப்பட்டுள்ளது)

| | |
|---|---|
| 1.காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண் | காவல் ஆய்வாளர்,<br>ஊத்துமலை காவல் நிலையம்,<br>ஊத்துமலை கா.நி.கு.எண். 54/2016 |
| 2. எதிரியின் பெயர்<br>3. தந்தையாரின் பெயர்<br>4. தொழில்<br>5. குடியிருப்பு<br>6. வயது | 1.தெய்வசுந்தரபாண்டியன், வயது 33,<br>த/பெ. இசக்கிதுரை,<br>4/84, தெற்குத் தெரு, அ.மருதப்பபுரம்.<br>2. வெள்ளதுரை, வயது 37,<br>த/பெ. மாடசாமித்தேவர்,<br>தட்டப்பாறை.<br>3. கணபதிபாண்டியன், வயது 58,<br>த/பெ. துரைப்பாண்டி என்ற மருதையாத்தேவர்,<br>தட்டப்பாறை.<br>4. மாரியப்பன், வயது 40,<br>த/பெ.ஸ்ரீரெங்கம்,<br>கட்டளைத் தெரு, டவுண், திருநெல்வேலி.<br>5.கணபதி பாண்டியன் என்ற கணேசன்,<br>வயது 40,<br>த/பெ. மாடசாமித் தேவர்,<br>பிள்ளையார்கோவில் தெரு, தட்டப்பாறை.<br>6.வெள்ளத்துரை, வயது 43,<br>த/பெ. சாமித்துரை,<br>பஞ்சாயத்து போர்டு தெரு, சுரண்டை. |

| | |
|---|---|
| | **7.சபரிசெல்வம், வயது 21,**<br>**த/பெ. மணிகண்டன்,**<br>**அரண்மனை தெரு, சுரண்டை(இறப்பு)**<br>8. மாரியப்பன், வயது 47,<br>த/பெ.சங்கரபாண்டியன்,<br>அரண்மனை தெரு, சுரண்டை<br>9. ஸ்ரீரெங்கம், வயது 26,<br>த/பெ. சங்கரன்,<br>கட்டளை கருவேலன் குண்டு தெரு,<br>திருநெல்வேலி டவுண்.<br>10. சிவா என்ற சிதம்பரம், வயது 29,<br>த/பெ. பழனி,<br>கட்டளை கருவேலன் குண்டு தெரு,<br>திருநெல்வேலி டவுண்.<br>11. விஷ்ணு, வயது 20,<br>த/பெ. சீனிவாசன்,<br>34-பி, பாரதியாத் தெரு, டவுண், திருநெல்வேலி. |
| 7. சம்பவ நாள் | 29.02.2016 |
| 8. முறையீடு நாள் | 01.03.2016 |
| 9. எதிரி கைது செய்யப்பட்ட நாள் | 1 வது எதிரி 06.03.2016, 2 வது எதிரி 28.03.2016, 3 வது எதிரி 09.03.2016, 4 வது எதிரி 12.03.2016, 5 வது எதிரி 09.10.2016, 6 வது எதிரி 21.03.2016, 8 வது எதிரி 06.03.2016, 9 வது எதிரி 15.03.2016, 10 வது எதிரி 15.03.2016, 11 வது எதிரி 14.03.2016 |
| 10. பிணையில் விடுவித்த நாள் | 1 வது எதிரி 26.04.2016, 2 வது எதிரி 11.05.2016, 3 வது எதிரி 27.04.2016, 4 வது எதிரி 28.04.2016,, 5 வது எதிரி 27.04.2016 6 வது எதிரி 13.05.2016, 8 வது எதிரி 28.04.2016, 9 வது எதிரி 29.04.2016, 10 வது எதிரி 03,05,2016, 11 வது எதிரி 29.04.2016 |
| 11.மேல் விசாரணைக்கு அனுப்பப்பட்ட நாள் | 11.03.2019 |
| 12. விசாரணை துவக்க நாள் | 07.09.2019 |

| | |
|---|---|
| 13.எதிரி மீது வனையப்பட்ட குற்றச்சாட்டு | 1 வது எதிரி மீது இதச பிரிவுகள் 120(பி) உ/இ 302, 120(பி) உ/இ 364, 364, 294(பி)(2 எண்ணிக்கை), 120(பி) உ/இ 302, 147, 148 உ/இ 149, 341, 294(பி) (2 எண்ணிக்கை) உ/இ 149, 307 உ/இ 149, 302 உ/இ 149 கீழும், 2 வது எதிரி மீது இதச பிரிவுகள் 120(பி) உ/இ 302, 120(பி) உ/இ 364, 364, 294(பி) (2 எண்ணிக்கை) கீழும், 3 வது எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி)(2 எண்ணிக்கை), 120(பி) உ/இ 302, 120(பி) உ/இ 302, 147, 148, 341, 294(பி) (2 எண்ணிக்கை), 307, 302 கீழும், 4 வது எதிரி மீது இதச பிரிவுகள் 120(பி) உ/இ 302, 120(பி) உ/இ 364, 364, 294(பி)(2 எண்ணிக்கை) உ/இ 149 கீழும், 5 வது எதிரி மீது இதச பிரிவுகள் 120(பி) உ/இ 302, 120(பி) உ/இ 364, 364, 294(பி)(2 எண்ணிக்கை) உ/இ 149 கீழும், 6 வது எதிரி மீது இதச பிரிவுகள் 120(பி) உ/இ 302, 120(பி) உ/இ 364, 364, 294(பி) (2 எண்ணிக்கை) உ/இ 149, 120(பி) உ/இ 302, 147, 148, 341, 294(பி)(2 எண்ணிக்கை) உ/இ 149, 307, 302 கீழும், 7 வது எதிரி மீது இதச பிரிவுகள் 120(பி) உ/இ 302, 120(பி) உ/இ 364, 364, 294(பி) (2 எண்ணிக்கை) உ/இ 149, 120(பி) உ/இ 302 148, 341, 294(பி)(2 எண்ணிக்கை) உ/இ 149, 307, 302 ன் கீழும், 8 வதுஎதிரி மீது இதச பிரிவுகள் 120(பி) உ/இ 302, 120(பி) உ/இ 364, 364, 294(பி)(2 எண்ணிக்கை) உ/இ 149, 120(பி) உ/இ 302 கீழும், 9 வது எதிரி மீது இதச பிரிவுகள் 120(பி) உ/இ 302, 120(பி) உ/இ 364, 364, 294(பி)(2 எண்ணிக்கை) உ/இ 149, 120(பி) உ/இ 302, 147, 148 உ/இ 149, 341, 294(பி) (2 எண்ணிக்கை) உ/இ 149, 307 உ/இ 149, 302 உ/இ 149 கீழும், 10 வது எதிரி மீது இதச பிரிவுகள் 120(பி) உ/இ 302, 120(பி) உ/இ 364, 364, 294(பி) (2 எண்ணிக்கை) உ/இ 149, 120(பி) உ/இ 302, 147, 148 உ/இ 149, 341, 294(பி)(2 எண்ணிக்கை) உ/இ 149, 307 உ/இ 149, 302 உ/இ 149 கீழும், 11 வது |

| | |
|---|---|
| | எதிரி மீது இதச பிரிவுகள் 120(பி) உ/இ 302, 120(பி) உ/இ 364, 364, 294(பி)(2 எண்ணிக்கை) உ/இ 149, 120(பி) உ/இ 302, 147, 148 உ/இ 149, 341, 294(பி) (2 எண்ணிக்கை) உ/இ 149, 307 உ/இ 149, 302 உ/இ 149 கீழும் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது. |
| 14. எதிரியின் வாதம் | குற்றவாளி இல்லை |
| 15. விசாரணை முடிவுற்ற நாள் | 17.03.2026 |
| 16. தீர்ப்பு தேதி | 18.03.2026 |
| 17. தீர்ப்பு | முடிவாக 1 வது எதிரியை இதச பிரிவுகள் 120(பி) உ/இ 302, 120(பி) உ/இ 364, 364, 294(பி)(2 எண்ணிக்கை), 120(பி) உ/இ 302, 147, 148 உ/இ 149, 341, 294(பி)(2 எண்ணிக்கை) உ/இ 149, 307 உ/இ 149, 302 உ/இ 149 கீழும், 2 வது எதிரியை இதச பிரிவுகள் 120(பி) உ/இ 302, 120(பி) உ/இ 364, 364, 294(பி)(2 எண்ணிக்கை) கீழும்,3 வது எதிரியை இதச பிரிவுகள் 294(பி)(2 எண்ணிக்கை), 120(பி) உ/இ 302, 120(பி) உ/இ 302, 147, 148, 341, 294(பி) (2 எண்ணிக்கை), 307, 302 கீழும்,4 வது எதிரியை இதச பிரிவுகள் 120(பி) உ/இ 302, 120(பி) உ/இ 364, 364, 294(பி)(2 எண்ணிக்கை) உ/இ 149 கீழும், 5 வது எதிரியை இதச பிரிவுகள் 120(பி) உ/இ 302, 120(பி) உ/இ 364, 364, 294(பி)(2 எண்ணிக்கை) உ/இ 149 கீழும்,6 வது எதிரியை இதச பிரிவுகள் 120(பி) உ/இ 302, 120(பி) உ/இ 364, 364, 294(பி) (2 எண்ணிக்கை) உ/இ 149, 120(பி) உ/இ 302, 147, 148, 341, 294(பி)(2 எண்ணிக்கை) உ/இ 149, 307, 302 கீழும்,8 வது எதிரியை இதச பிரிவுகள் 120(பி) உ/இ 302, 120(பி) உ/இ 364, 364, 294(பி) (2 எண்ணிக்கை) உ/இ 149, 120(பி) உ/இ 302, கீழும்,9 வது எதிரியை இதச பிரிவுகள் 120(பி) உ/இ 302, 120(பி) உ/இ 364, 364, 294(பி)(2 எண்ணிக்கை) |

| | |
|---|---|
| | உ/இ 149, 120(பி) உ/இ 302, 147, 148 உ/இ 149, 341, 294(பி)(2 எண்ணிக்கை) உ/இ 149, 307 உ/இ 149, 302 உ/இ 149 கீழும்,10 வது எதிரியை இதச பிரிவுகள் 120(பி) உ/இ 302, 120(பி) உ/இ 364, 364, 294(பி)(2 எண்ணிக்கை) உ/இ 149, 120(பி) உ/இ 302, 147, 148 உ/இ 149, 341, 294(பி)(2 எண்ணிக்கை) உ/இ 149, 307 உ/இ 149, 302 உ/இ 149 கீழும், 11 வது எதிரியை இதச பிரிவுகள் 120(பி) உ/இ 302, 120(பி) உ/இ 364, 364, 294(பி)(2 எண்ணிக்கை) உ/இ 149, 120(பி) உ/இ 302, 147, 148 உ/இ 149, 341, 294(பி)(2 எண்ணிக்கை) உ/இ 149, 307 உ/இ 149, 302 உ/இ 149 கீழும் குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து, 1 முதல் 6 மற்றும் 8 முதல் 11 வது எதிரிகளை மேற்படி பிரிவுகள் கீழான குற்றச் சாட்டுகளிலிருந்து குவிமுச பிரிவு 235(1)ன் கீழ் விடுதலை செய்து இந்த நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது. இந்த வழக்கில் இந்நீதிமன்ற பி.ஆர். 2/2024 ல் ரிமாண்ட் செய்யப்பட்டுள்ள வரிசை எண் 1 முதல் 8 ல் கண்ட சொத்துக்களை வழக்கின் மேல்முறையீட்டு காலம் அல்லது மேல்முறையீடு இருப்பின் அதற்குப் பின் அழிக்கவும், 9003891031 எண் கொண்ட ஏர்டெல் சிம்கார்டுன் கூடிய நோக்கியா கருப்புக் கலர் செல்போனையும், 8190855301 எண் கொண்ட ஐடியா சிம்கார்டு உடைய கருப்புக் கலர் நோக்கிய செல்போனையும், வழக்கின் மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர், மேல்முறையீடு இருப்பின் அதற்குப் பின்னர் அதன் உரிமையாளர்கள் வசம் ஒப்படைக்கவும், பதிவு எண் TN 59 AH 8679 உள்ள Ford Fiesta கார் ஏற்கனவே அதன் உரிமையாளர் உமா மகேஷ்வரி, க/பெ. நல்லமலை என்பவரிடம் தென்காசி நீதித்துறை நடுவர் நீதிமன்ற கு.ப.ம.எண். 8223/2016 நாள் 24.08.2016 உத்தரவின்படி இடைக்காலமாக |

| | |
|---|---|
| | பிணைமுறியில் ஒப்படைக்கப்பட்டுள்ளதால் மேற்படி வாகனத்தை அவரே வைத்துக் கொள்ளவும், வழக்கின் மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர், மேல்முறையீடு இருப்பின் அதற்குப் பின்னர் பிணைமுறியை ரத்து செய்யவும்,வாகனத்தின்அசல் ஆர்.சி.புத்தகத்தை உரிமையாளர் வசம் ஒப்படைக்வும், பதிவு எண் TN 72 AK 5017 உள்ள Tavera கார் ஏற்கனவே அதன் உரிமையாளர் சரவணன் என்பவரிடம் தென்காசி நீதித்துறை நடுவர் நீதிமன்ற கு.ப.ம.எண். 2388/2016 நாள் 18.03.2016 உத்தரவின்படி இடைக்காலமாக பிணை முறியில் ஒப்படைக்கப்பட்டுள்ளதால் மேற்படி வாகனத்தை அவரே வைத்துக் கொள்ளவும் வழக்கின் மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர், மேல்முறையீடு இருப்பின் அதற்குப் பின்னர் பிணைமுறியை ரத்து செய்யவும், வாகனத்தின் அசல் ஆர்.சி.புத்தகத்தை உரிமையாளர் வசம் ஒப்படைக்கவும், பதிவு எண் TN 01 V 7975 உள்ள Indigo LS கார் ஆலங்குளம் நீதித்துறை நடுவர் நீதிமன்ற கு.ப.ம.எண். 4833/2018 நாள் 09.07.2018 தேதிய உத்தரவின்படி அதன் உரிமையாளரான மாரியப்பன், த/பெ. ஸ்ரீரங்கம் என்பவரிடம் இடைக்காலமாக பிணைமுறியில் ஒப்படைக்கப்பட்டுள்ளதால் மேற்படி வாகனத்தை அவரே வைத்துக் கொள்ளவும் வழக்கின் மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர், மேல்முறையீடு இருப்பின் அதற்குப் பின்னர் பிணைமுறியை ரத்து செய்யவும்,வாகனத்தின்அசல் ஆர்.சி.புத்தகத்தை உரிமையாளர் வசம் ஒப்படைக்கவும் உத்தரவிடப்படுகின்றது. |
| 18. தாமதத்திற்கான விளக்கம் | -- |

இந்த வழக்கானது 17.03.2026 ம் தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியான விசாரணைக்காக வந்தபோது அரசு தரப்பில் கூடுதல் அரசு வழக்கறிஞர் திரு.மாரிக்குட்டி அவர்கள் முன்னிலையாகியும், எதிரிகளுக்காக வழக்கறிஞர் திரு.ஏ.குட்டித்துரை அவர்கள் முன்னிலையாகியும் இரு தரப்பு வாதங்களைக் கேட்டறிந்தும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றப் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

## தீர்ப்புரை

இவ்வழக்கின் 1 வது மற்றும் 2 வது எதிரிகள் 25.01.2016 அன்று கொடைக்கானலுக்கு சென்று ராமர் என்பவரால் அறிமுகம் செய்து வைக்கப்பட்ட புகார்தாரரிடம் 1 வது எதிரி ரூபாய் ஐந்து லட்சம் கொடுத்து அவருடைய கடனைத் தீர்ப்பதற்காக கருப்புப்பணமாக ஒரு கோடி பெற்றுத் தருமாறு கேட்டு அவரும் அதற்கு உறுதி அளித்ததாகவும், மேலும் 10 வெற்றுக் காசோலைகளையும் நல்லமலையிடம் உசிலம்பட்டியில் வைத்து கொடுத்ததாகவும், மேலும் 09.02.2016 அன்று 1 வது, 2 வது மற்றும் 4 வது எதிரிகள் உசிலம்பட்டிக்கு சென்று மேலும் ரூபாய் இரண்டு லட்சம் நல்லமலையிடம் கொடுத்து சீக்கிரம் கருப்புப் பணத்தை கேட்டதாகவும், ஆனால் நல்லமலை அவர் சொன்னபடி 1 வது எதிரியிடம் பணத்தை கொடுக்காததால் 29.02.2016 அன்று 1 வது எதிரி நல்லமலையைத் தொடர்பு கொண்டு அவரிடம் இரண்டு கோடி ரூபாய் பணம் இருப்பதாகவும் அதனைப் பெற்றுக் கொண்டு பத்து கோடி பணம் கேட்டு ராஜபாளையத்திற்கு வரச் சொன்னதாகவும், பின்னர் 1 வது எதிரி கூறியதன் பேரில் புகார்தாரர் நல்லமலை ராஜபாளையம் பஸ்ஸ்டாண்டிற்கு வந்ததாகவும், அதே நாள் 29.02.2016 அன்று 17.00 மணிக்கு 1,2 வது எதிரிகளும், 4 முதல் 11 வரையான எதிரிகளும் மேற்படி பேருந்து நிறுத்தத்தில் வைத்து நல்லமலை பணம் தராவிட்டால் அவரைக் கொலை செய்ய வேண்டும் என்ற சதித்திட்டம் தீட்டி அதே நாள் 19.30 மணிக்கு நல்லமலையையும் அவருடைய ஓட்டுனரான ராஜபாண்டியன் என்ற ஜெகதீசையும் கடத்திக் கொண்டு தட்டப்பாறையில் உள்ள 3 வது எதிரியின் தோட்டத்திற்கு கூட்டி வந்ததாகவும், மேற்படி இடத்தில் வைத்து 1,2,3 மற்றும் 4 வது எதிரிகள் நல்லமலையை அசிங்கமான வார்த்தைகாளல் திட்டியதாகவும், அப்போது நல்லமலை 2 வது எதிரியை நோக்கி துப்பாக்கியால் சுட்டி காயம் ஏற்படுத்தியதாகவும், இதனால் கோபம் கொண்ட மற்ற எதிரிகள் நல்லமலையையும், ராஜபாண்டியன் என்ற ஜெகதீசையும் அவர்களது சட்டையைக் கழற்றி கைகளைக் கட்டி, 1,3 மற்றும் 6 முதல் 11 வது எதிரிகள் மேற்படி இருவரையும் ஊத்துமலையிலுள்ள ஆஞ்சநேயர் கோவிலுக்கு கிழக்குப் பக்கம் உள்ள மலைக்கு கூட்டிச்

சென்று, 6 வது எதிரியை யாராவது வருகிறார்களா என்று கவனிக்கச் சொல்லியும், 8 வது எதிரியை 3 வது எதிரியின் தோட்டத்தில் காருடன் இருக்கச் சொன்னதாகவும், பின்னர் 1,3,6,7,9 முதல் 11 வது எதிரிகள் நல்லமலையையும், ராஜபாண்டி என்ற ஜெகதீசையும் கொலை செய்ய வேண்டும் என்று சட்டவிரோதமாக ஒன்று கூடி, இருவரையும் 20 அடி துரம் மலையை நோக்கி இழுத்துச் சென்று சட்டவிரோதமாக அடைத்து வைத்ததாகவும், 23.45 மணிக்கு 3 வது எதிரி அருவாளால் நல்லமலையின் வலது தோள்பட்டை, புஜத்தில் பலமுறை வெட்டியதாகவும், 3 வது எதிரி ராஜபாண்டி என்ற ஜெகதீசின் கழுத்து, வலது தோள்பட்டை, கீழ் தாடை, தலையின் இடது பக்கம் ஆகிய இடங்களில் அருவாளால் வெட்டியதாகவும், 6 வது எதிரி ராஜபாண்டி என்ற ஜெகதீசை அருவாளால் முதுகு, கழுத்து, வலது தோள்பட்டையில் வெட்டியதாகவும், 7 வது எதிரி ராஜபாண்டி என்ற ஜெகதீசை கத்தியால் மார்பின் வலது பக்கம், முதுகின் வலது மற்றும் இடது பக்கம் ஆகிய இடங்களில் குத்தி காயங்களை ஏற்படுத்தி அவருக்கு சம்பவயிடத்திலேயே இறப்பினை ஏற்படுத்தியதாகவும், நல்லமலை கொடுங்காயங்களுடன் எதிரிகளிடமிருந்து தப்பிவிட்டதாகவும், எனவே 1 முதல் 11 எதிரிகள் இதச பிரிவுகள் 120(பி) உ/இ 302, 294(பி), கீழும், 1,2,4 முதல் 11 வரையான எதிரிகள் இதச பிரிவுகள் 364 கீழும், 1, 3,6,7,9 முதல் 11 வரையான எதிரிகள் இதச பிரிவுகள் 148, 302 மற்றும் 302 உ/இ 149 ன் கீழும் குற்றம் புரிந்துள்ளதாக ஊத்துமலை காவல் ஆய்வாளர் ஆலங்குளம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2) அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரிக்கை மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட ஆவணங்களின் பேரில் கற்றறிந்த நடுவர் அவர்கள் இவ்வழக்கினை முதல்நிலை விசாரணை வழக்கு எண். 12/2018 ஆக கோப்பிற்கு எடுத்து, பின்னர் எதிரிகளுக்கு அரசு தரப்பு ஆவணங்களின் நகல்களை கு.வி.மு.ச.பிரிவு 207 ன்படி வழங்கி, எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அமர்வு நீதிமன்றத்தினால் மட்டுமே விசாரணை செய்யப்படக்கூடியது என்பதால், வழக்கானது, குவிமுச பிரிவு 209 ன் கீழான நடைமுறைகளைப் பின்பற்றி மேல் விசாரணையின் பொருட்டு திருநெல்வேலி மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு, அமர்வு வழக்குஎண்.230/2019 ஆக கோப்புக்கு எடுக்கப்பட்டு, விசாரணைக்காக இந்நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

3) எதிரிகள் இந்நீதிமன்றத்தின் முன்பு ஆஜரானதும், கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் மற்றும் கற்றறிந்த எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆகியோர்களைக் கேட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்த பின்னரும், குவிமுச பிரிவு 228(1)(ஆ)ன் கீழ் எதிரிகள் மீது

குற்றச்சாட்டு வனைவதற்கு போதிய முகாந்திரம் இருந்த காரணத்தினால், குவிமுச பிரிவு 228(2) ன் கீழ் 1 வது எதிரி மீது இதச பிரிவுகள் 120(பி) உ/இ 302, 120(பி) உ/இ 364, 364, 294(பி)(2 எண்ணிக்கை), 120(பி) உ/இ 302, 147, 148 உ/இ 149, 341, 294(பி)(2 எண்ணிக்கை) உ/இ 149, 307 உ/இ 149, 302 உ/இ 149 கீழும், 2 வது எதிரி மீது இதச பிரிவுகள் 120(பி) உ/இ 302, 120(பி) உ/இ 364, 364, 294(பி)(2 எண்ணிக்கை) கீழும், 3 வது எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி)(2 எண்ணிக்கை), 120(பி) உ/இ 302, 120(பி) உ/இ 302, 147, 148, 341, 294(பி)(2 எண்ணிக்கை), 307, 302 கீழும், 4 வது எதிரி மீது இதச பிரிவுகள் 120(பி) உ/இ 302, 120(பி) உ/இ 364, 364, 294(பி)(2 எண்ணிக்கை) உ/இ 149 கீழும், 5 வது எதிரி மீது இதச பிரிவுகள் 120(பி) உ/இ 302, 120(பி) உ/இ 364, 364, 294(பி)(2 எண்ணிக்கை) உ/இ 149 கீழும், 6 வது எதிரி மீது இதச பிரிவுகள் 120(பி) உ/இ 302, 120(பி) உ/இ 364, 364, 294(பி)(2 எண்ணிக்கை) உ/இ 149, 120(பி) உ/இ 302, 147, 148, 341, 294(பி)(2 எண்ணிக்கை) உ/இ 149, 307, 302 கீழும், 7 வது எதிரி மீது இதச பிரிவுகள் 120(பி) உ/இ 302, 120(பி) உ/இ 364, 364, 294(பி)(2 எண்ணிக்கை) உ/இ 149, 120(பி) உ/இ 302 148, 341, 294(பி)(2 எண்ணிக்கை) உ/இ 149, 307, 302 ன் கீழும், 8 வதுஎதிரி மீது இதச பிரிவுகள் 120(பி) உ/இ 302, 120(பி) உ/இ 364, 364, 294(பி)(2 எண்ணிக்கை) உ/இ 149, 120(பி) உ/இ 302 கீழும், 9 வது எதிரி மீது இதச பிரிவுகள் 120(பி) உ/இ 302, 120(பி) உ/இ 364, 364, 294(பி)(2 எண்ணிக்கை) உ/இ 149, 120(பி) உ/இ 302, 147, 148 உ/இ 149, 341, 294(பி)(2 எண்ணிக்கை) உ/இ 149, 307 உ/இ 149, 302 உ/இ 149 கீழும், 10 வது எதிரி மீது இதச பிரிவுகள் 120(பி) உ/இ 302, 120(பி) உ/இ 364, 364, 294(பி)(2 எண்ணிக்கை) உ/இ 149, 120(பி) உ/இ 302, 147, 148 உ/இ 149, 341, 294(பி)(2 எண்ணிக்கை) உ/இ 149, 307 உ/இ 149, 302 உ/இ 149 கீழும், 11 வது எதிரி மீது இதச பிரிவுகள் 120(பி) உ/இ 302, 120(பி) உ/இ 364, 364, 294(பி)(2 எண்ணிக்கை) உ/இ 149, 120(பி) உ/இ 302, 147, 148 உ/இ 149, 341, 294(பி)(2 எண்ணிக்கை) உ/இ 149, 307 உ/இ 149, 302 உ/இ 149 கீழும் குற்றச்சாட்டு வனைந்து விளக்கிக் கூறி வினவியபோது எதிரிகள் தாங்கள் குற்றவாளி இல்லை எனக் கூறினார்கள். எனவே, அரசு தரப்பு சாட்சிய விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4) அரசு தரப்பில், எதிரிகள் மீதான குற்றத்தினை நிரூபிக்கும் பொருட்டு அ.சா.1 முதல் அ.சா.12 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ 57 வரையிலான சான்றாவணங்கள் மற்றும் சா.பொ.1 முதல் சா.பொ.12 வரையிலான சான்றுப் பொருட்கள் குறியீடு செய்யப்பட்டது.

**5) விசாரணை செய்யப்பட்ட சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து தெரியவரும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு:**

**(i)** இவ்வழக்கில் விசாரணை செய்யப்பட்டுள்ள அ.சா.7 திருமதி. அம்சமணி மற்றும் அ.சா.9 திருமதி. தீபா ஆகியோர்கள் முறையே இவ்வழக்கில் இறந்து போனதாகக் கூறப்படும் ராஜபாண்டி என்ற ஜெகதீசனின் தாயார் மற்றும் மனைவி ஆவார்கள். மேற்படி ராஜபாண்டி என்ற ஜெகதீசன் அ.சா.1 நல்லமலையிடம் தேங்காய்களை வாங்கி வியாபாரம் செய்வது வழக்கம். அ.சா.1 வெளியூர் செல்லும் நேரங்களில் மேற்படி ராஜபாண்டி என்ற ஜெகதீசனை டிரைவராகஅழைத்து செல்வார். கடந்த 28.02.2026 அன்று காலை 7 மணியளவில் தேவதானப்பட்டியிலிருந்து கொடைக்கானலுக்கு வேலை விஷயமாக மேற்படி ராஜபாண்டி என்ற ஜெகதீசனை அ.சா.1 அழைத்துச் சென்றார். அன்று காலை 10 மணியளவில் அ.சா.8 டம் செல்போனில் பேசிய பின்னர், அவர் போன் எடுக்கவும் இல்லை, பேசவும் இல்லை. 02.03.2016 அன்று அ.சா.1, அ.சா.8 க்கு போன் செய்து அவர் திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் வெட்டுப்பட்டு சிகிச்சையில் இருப்பதாகவும், உறவினர்களுடன் கிளம்பி வருமாறு சொன்னதன் பேரில், அ.சா.7, அ.சா.8 இருவரும் அங்கு சென்று கேட்டபோது, கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாக பிரச்சினை ஏற்பட்டு, சுமார் 10 பேர் அவரையும், ஜெகதீசனையும் தாக்கியதாகவும், அவர் தப்பி வந்து ஊத்துமலை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தாகவும், ஜெகதீசனுக்கு என்ன ஆனது என்ற தெரியவில்லை என்று தெரிவித்தார். இது குறித்து அ.சா.8 ஊத்துமலை காவல் நிலையத்தில் சென்று கேட்டபோது அவரது கணவரைப் பற்றி தகவல் கிடைத்தால் தெரிவிப்பதாக சொன்னார்கள்.

**(ii)** அ.சா.11 திருமதி. சாந்தி ,ஊத்துமலை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்தபோது, 01.03.2016 அன்று 15.00 மணிக்கு அ.சா.1 நல்லமலை வலது கையில் ரத்தக் காயங்களுடன் நிலையம் ஆஜராகிக் கொடுத்த புகார் வாக்குமூலத்தைப் பெற்று, நிலையக் குற்ற எண் 54/2016 இதச பிரிவுகள் 147, 148, 294(பி), 366, 324, 506(2)ன் கீழ் வழக்கு பதிவு செய்து, காயம்பட்ட அ.சா.1 ஐ 108 ஆம்புலன்ஸ் மூலம் நிலைய மருத்துவ நமூனா 15/2016 படி திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து விட்டு, வழக்கினை ஆய்வாளர் பார்வைக்கு வைத்தார். புகார் வாக்குமூலம்அ.சா.ஆ.36 அச்சு முதல் தகவலறிக்கை அ.சா.ஆ.37 அ.சா.1 நல்லமலையை அ.சா.6 மருத்துவர் திரு. அன்பு பரிசோதனை செய்து, அவருக்கு வலதுகை, வலது முன்னங்கை, இரண்டு கால் முட்டு, வலது தோள்பட்டை, இடது தோள்பட்டை, தலை ஆகிய இடங்களில் இருந்த காயத்திற்கு சிகிச்சை அளித்தும், நுண்கதி பட

பரிசோதனையில் அவரது கழுத்துப்பட்டை எலும்பின் வெளிப்புறப்பகுதியில் எலும்பு முறிவு காணப்பட்டதால் காயம் கொடுங்காயம் என்று விபத்து பதிவேட்டு நகல் அ.சா.ஆ.30 ம், காயச்சான்று அ.சா.ஆ.31 ம் வழங்கியுள்ளார்.

**(iii)** பின்னர் வழக்கினை அ.சா.12 திரு.செந்தாமரைக் கண்ணன், ஆய்வாளர் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு, வழக்கின் சட்டப்பிரிவினை இதச பிரிவுகள் 147. 148. 364. 294(பி), 324, 506(2) ஆக மாற்றம் செய்து அ.சா.ஆ.38 ஆன சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தார். 05.03.2026 அன்று எதிரி தெய்வசுந்தரபாண்டியன் என்ற தெய்வத்தை அ.சா.4 தர்மராஜ், கிராம நிர்வாக அதிகாரி மற்றும் அ.சா.5 திருமதி. மகாலட்சுமி, கிராம உதவியாளர் முன்பு கைது செய்து, அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தார். ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.39. அதன்படி சம்பவயிடம் சென்று சாட்சிகள் முத்துராஜா, ஆதி முன்பு பார்வையிட்டு அ.சா.ஆ.40 பார்வை மகஜர், அ.சா.ஆ.41 மாதிரி வரைபடம் தயார் செய்து, சம்பவயிடத்திலிருந்து ராஜபாண்டி என்ற ஜெகதீசின் பிரேதத்தை கைப்பற்றி, பிரேத விசாரணை நடத்தி, பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.42 தயார் செய்து, பிரேதத்தை அ.சா.10 தலைமைக் காவலர் குத்தாலிங்கம் மூலம் பிரேதப் பரிசோதனைக்கு அ.சா.ஆ.32 வேண்டுகோள் கடிதம் மூலம் அனுப்பி வைத்தார். அ.சா.1 க்கு வழங்கப்பட்ட கடவுச் சீட்டுகள் 2 எண்ணம் அ.சா.ஆ.35 வரிசை. மேற்படி பிரேதத்தை அ.சா.9 மருத்துவர் செல்வமுருகன் பிரேதப் பரிசோதனை செய்து அ.சா.ஆ.34 பிரேத பரிசோதனை அறிக்கை வழங்கினார். உள் உறுப்புகள் சேகரிக்கப்பட்டு, ரசாயணப் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டு, அதில் எவ்வித நச்சுப் பொருட்களும் இல்லை என்று கண்டறியப்பட்டு அ.சா.ஆ.33 விசரா அறிக்கை பெறப்பட்டது. புலன் விசாரணையின் தொடர்ச்சியாக, அ.சா.12, 05.03.2016 அன்று 16 மணிக்கு அ.சா.ஆ.2 அத்தாட்சி மூலம் அ.சா.3 ன் தோட்டத்திலிருந்து டி.என். 59 AH 8679 Fiesta காரை கைப்பற்றினார். காரின் புகைப்படம் சா.பொ.1. அதே நாள் 16.15 மணிக்கு சம்பவயிடத்திலிருந்து சா.பொ.10 ஆன ரத்தம் பட்ட மண், சா.பொ.11 ஆன ரத்தம் படாத மண், சா.பொ.12 ஆன ரத்தம்படிந்த புல் இவைகளை அ.சா.ஆ.43 அத்தாட்சியில் கைப்பற்றியுள்ளார். பிரேதத்திலிருந்து பிரேதப் பரிசோதனை முடிந்து எடுக்கப்பட்ட சா.பொ.8 ஆன ரத்தக்கறையுடன் கூடிய வெள்ளை நிற முண்டா பனியன் ஒன்று, சா.பொ.9 ஆன வெட்டியெடுக்கப்பட்ட ரத்தக்கறையுடன் கூடிய புளு நிற ஜட்டி ஒன்று ஆகியவற்றை அ.சா.10 ஆஜர் செய்ததை பெற்று, வழக்குச் சொத்துக்களுடன் நிலையம் வந்து சட்டப்பிரிவினை இதச பிரிவுகள் 147, 148, 120(பி), 364, 294(பி), 307, 302, 506(2) ஆக மாற்றம்

செய்து அ.சா.ஆ.44 ஆன சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்து, எதிரியை நீதிமன்றக் காவலுக்கு அனுப்பி வைத்தார். 06.03.2016 அன்று எதிரிகள் சபரிசெல்வம், மாரியப்பன் ஆகியோர்களை சுரண்டை வி.கே.புதூர் ரோட்டில் கலிங்கப்பட்டி பஸ்ஸ்டாப்பில் வைத்து அ.சா.4 மற்றும் அ.சா.5 முன்பு கைது செய்து, அவர்கள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்து, அதன் அடிப்படையில் எதிரி மாரியப்பன் வீட்டருகில் மறைத்து வைத்திருந்த டி.என்.72 ஏகே 5017 என்ற டவேரா கார் ஒன்றையும், கத்தியையும் அத்தாட்சி அ.சா.ஆ.6, அ.சா.ஆ.8 ல் கைப்பற்றினார். எதிரி சபரி செல்வம், எதிரி மாரியப்பன், கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி முறையே அ.சா.ஆ.45. அ.சா.ஆ.46 ஆகும். டவேரா காரின் புகைப்படம் சா.பொ.3, கத்தி சா.பொ.4 ஆகும். எதிரிகளை நீதிமன்றக் காவலுக்கு அனுப்பி வைத்தும், வழக்குச் சொத்துக்களை அ.சா.ஆ.47 வரிசையான படிவம் 91(5 எண்ணம்) மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தார். 09.03.2016 அன்று எதிரி கணபதிபாண்டியனை வீ.ரெட்டியார்பட்டியில் வைத்து இதே சாட்சிகள் முன்பு கைது செய்து அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தைப் பதிவு செய்து, அதன் அடிப்படையில் அவர் சட்டைப்பையிலிருந்து எடுத்து ஆஜர் செய்த 90038 91031 எண் கொண்ட ஏர்டெல்சிம்கார்டுடன் கூடிய கருப்பு கலர் நோக்கியோ செல்போனை அ.சா.ஆ.49 அத்தாட்சியிலும், ஊத்துமலை - ஆஞ்சநேயர் கோவிலுக்கு செல்லும் வழியில் உள்ள ரோட்டின் பாலத்திற்கு கீழ் மறைத்து வைத்திருந்த அருவாளை அ.சா.ஆ.4 அத்தாட்சியிலும் கைப்பற்றினார். எதிரி கணபதி தேவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.48. அருவாள் சா.பொ.2. எதிரியை நீதிமன்றக் காவலுக்கு அனுப்பி வைத்தார். 11.03.2016 அன்று எதிரி மாரியப்பன் என்பவரை போலிஸ் காவலுக்கு எடுத்து இதே சாட்சிகள் முன்பு விசாரிக்க, அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்து, அதன் அடிப்படையில் திருநெல்வேலி டவுனில் உள்ள அவரது வீட்டிற்கு அருகில் நின்று கொண்டிருந்த டி.என்.01 வி 7975 என்ற எண் கொண்ட இண்டிகோ எஸ்.எஸ்.காரை அத்தாட்சி அ.சா.ஆ.10 ல் கைப்பற்றியுள்ளார். எதிரி மாரியப்பன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின்அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.50. இண்டிகோ காரின் புகைப்படம் சா.பொ.5. எதிரியை நீதிமன்றக் காவலுக்குஅனுப்பி வைத்துள்ளார். 14.03.2016 அன்று 9.15 மணிக்கு எதிரி விஷ்ணுவை இதே சாட்சிகள் முன்பு ஜங்ஷன் பஸ்ஸ்டாண்டில் வைத்து கைது செய்து, அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்து, அவர் எடுத்து ஆஜர் செய்த கருப்பு கலர் நோக்கியா லைட்டுன் கூடிய செல்போனுடன் 81908 55301 எண் கொண்ட சிம்கார்டு ஒன்றையும் அத்தாட்சி அ.சா.ஆ.14 ல் கைப்பற்றினார். ஒப்புதல் வாக்குமூலத்தின்

அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.51. செல்போன் சா.பொ.7. எதிரியை நீதிமன்றக் காவலுக்கு அனுப்பி வைத்தார். 14.03.2016 அன்று எதிரி கணேசனும், 15.03.2016 அன்று எதிரி ஸ்ரீரெங்கம், எதி சிவா என்ற சிதம்பரம் நீதிமன்றத்தில் சரண்டரானார்கள். பின்னர் 18.03.2016 அன்று எதிரி வெள்ளத்துரையை போலிஸ் காவலுக்கு எடுத்து 19.03.2016 அன்று இதே சாட்சிகள் முன்பு விசாரிக்க, அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்து, அதன் அடிப்படையில் அவர் கணபதி தேவரின் தோட்டத்திற்கு அருகில் ஒரு புதர் செடியின் மறைவிலிருந்து எடுத்து ஆஜர் செய்த அருவாளை அத்தாட்சி அ.சா.ஆ.12 ல் கைப்பற்றினார். எதிரி வெள்ளத்துரை கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.52 ஆகும். எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.4 ன் கையொப்பம் அ.சா.ஆ.1, அ.சா.ஆ.3, அ.சா.ஆ.5, அ.சா.ஆ.7, அ.சா.ஆ.9, அ.சா.ஆ.11, அ.சா.ஆ.13 ஆகும். எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.5 ன் கையொப்பம் அ.சா.ஆ.15 முதல் அ.சா.ஆ.21 மற்றும் அத்தாட்சியில் உள்ள அ.சா.5 ன் கையொப்பம் அ.சா.ஆ.22 முதல் அ.சா.ஆ.29 ஆகும். அருவாள் சா.பொ.6. பின்னர் சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து, வழக்குச் சொத்துக்களை பகுப்பாய்விற்கு அனுப்ப நீதிமன்றத்திற்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்தார். மருத்துவர்கள், தடய அறிவியல் துறை நிபுணர்கள், காவல்துறை தரப்பினர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார். மரபணு பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.53. ரசாயணப் பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.54. வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பப்பட்ட உயிரியல் வேண்டுகோள் கடிதம் அ.சா.ஆ.55 பிரேதத்திலிருந்து எடுக்கப்பட்ட மண்டையோட்டை பரிசோதனை செய்ய வழங்கப்பட்ட சூப்பர் இம்போசிஷன் வேண்டுகோள் கடிதம் அ.சா.ஆ.56 ஆகும். வழக்குச் சொத்துக்களை படிவம் 91 மூலம் நீதிமன்றம் அனுப்பி வைத்தார். படிவம் 91 (5 எண்ணம்) அ.சா.ஆ.57 வரிசையாகும். பின்னர் வழக்கினை ஆய்வாளர் திரு.குமரேசன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, சாட்சிகளை விசாரணை செய்து, விசாரணையை முடித்துக் கொண்டு எதிரிகள் மீது நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தார்.

**6)** சாட்சிய விசாரணை காலத்தில் 7 வது எதிரியான சபரி செல்வம் இறந்து விட்டதாக இறப்புச் சான்று தாக்கல் செய்யப்பட்டதன் பேரில் அவர் மீதான குற்றச்சாட்டானது அற்று விட்டதாக உத்ததரவிடப்பட்டது. விசாரணை செய்யப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து இதர எதிரிகளுக்கு எதிராக அமைந்த சாட்சியங்கள் குறித்து கு.வி.மு.ச.313(1)(ஆ) பிரிவின் கீழ் எடுத்துக் கூறி வினவிய போது, அவர்கள் அவைகளை பொய்

சாட்சியம் என்று கூறினார்கள். தங்கள் தரப்பில் விசாரணை செய்ய சாட்சிகள் இல்லை என்று தெரிவித்தார்கள். மேலும், எதிரிகள் தரப்பில் விசாரணை செய்ய சாட்சிகள் இல்லை என்று மேற்குறிப்பு செய்யப்பட்டு எதிரிகள் தரப்பு முடித்துக் கொள்ளப்பட்டது.

7) இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், 1 முதல் 6 மற்றும் 8 முதல் 11 வரையான எதிரிகள் மீது வனையப்பட்ட குற்றச்சாட்டுகள் அரசு தரப்பு சாட்சியங்கள், சான்றாவணங்கள் ஆகியவற்றின் வாயிலாக அரசு தரப்பினால் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

**8) பிரச்சனைக்கான தீர்வு-**

கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் தனது வாதுரையின்போது, இவ்வழக்கில் எதிரிகள் மீதான குற்றச்சாட்டினை நிரூபணம் செய்வதற்காக அரசு தரப்பில் 12 சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு 57 சான்றாவணங்கள் மற்றும் 12 சான்றுப் பொருட்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளதாகவும், மருத்துவர்கள் சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் மூலம் புகார்தாரருக்கு காயம் ஏற்பட்டுள்ளது என்பதும், ராஜபாண்டியன் என்ற ஜெகதீசின் மரணம் இயற்கையான மரணம் இல்லை என்பதும், புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்திலிருந்து எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின்அடிப்படையில் அவர்கள் அடையாளம் காட்டிய இடத்திலிருந்து வழக்கு சொத்துக்கள் கைப்பற்றப்பட்டுள்ளது என்பதும் நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியம் கிராம நிர்வாக அதிகாரியான அ.சா.4 மற்றும் கிராம உதவியாளரான அ.சா.5 ன் சாட்சியம் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்றும், வழக்கில் முறையாக புலன் விசாரணை செய்யப்பட்டு, குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எதிரிகள் மீதான குற்றச்சாட்டு அரசு தரப்பு சாட்சியங்கள், சான்றாவணங்கள், சான்றுப் பொருட்கள் வாயிலாக அரசு தரப்பினால் சந்தேகத்திற்கப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், எனவே எதிரிகளுக்கு அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டும் என்றும் வாதிட்டார்.

9) மாறாக எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் இவ்வழக்கில் புகார்தாரான அ.சா.1 பிறழ் சாட்சியாக மாறியுள்ளார் என்றும், வேறு சம்பவ சாட்சிகள் யாரும் அரசு தரப்பினால் விசாரிக்கப்படவில்லை என்றும், அ.சா.2, அ.சா.3 சம்பவத்தை கேள்விப்பட்ட சாட்சிகள் என்றும், எதிரிகள் கைது, ஒப்புதல் வாக்குமூலம், வழக்குச் சொத்துக்கள் கைப்பற்றப்பட்டது குறித்து விசாரணை செய்யபட்டுள்ள அ.சா.4, அ.சா.5 ஆகியோர்களின் சாட்சியம் நம்பகத்தன்மை

வாய்ந்த சாட்சியமாக இல்லை என்றும், வழக்கின் புலன் விசாரணையில் குறைபாடுகள் உள்ளது என்றும், எனவே எதிரிகள் மீது வனையப்பட்ட குற்றச்சாட்டுகள் அரசு தரப்பினால் சந்தேகத்திற்கப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றும், எனவே எதிரிகளை விடுதலை செய்ய வேண்டும் என்று வாதிட்டார்.

10) **<u>அரசு தரப்பு வழக்கு</u>**- இவ்வழக்கின் 1 வது மற்றும் 2 வது எதிரிகள் 25.01.2016 அன்று கொடைக்கானலுக்கு சென்று ராமர் என்பவரால் அறிமுகம் செய்து வைக்கப்பட்ட புகார்தாரர் நல்லமலையிடம் 1 வது எதிரி ரூபாய் ஐந்து லட்சம் கொடுத்து அவருடைய கடனைத் தீர்ப்பதற்காக கருப்புப்பணமாக ஒரு கோடி பெற்றுத் தருமாறு கேட்டு நல்லமலையும் அதற்கு உறுதி அளித்ததாகவும், மேலும் 10 வெற்றுக் காசோலைகளையும் நல்லமலையிடம் உசிலம்பட்டியில் வைத்து கொடுத்ததாகவும், 09.02.2016 அன்று 1 வது, 2 வது மற்றும் 4 வது எதிரிகள் உசிலம்பட்டிக்கு சென்று மேலும் ரூபாய் இரண்டு லட்சம் நல்லமலையிடம் கொடுத்து சீக்கிரம் கருப்புப் பணத்தை கேட்டதாகவும், ஆனால் நல்லமலை அவர் சொன்னபடி 1 வது எதிரியிடம் பணத்தை கொடுக்காததால் 29.02.2016 அன்று 1 வது எதிரி நல்லமலையைத் தொடர்பு கொண்டு அவரிடம் இரண்டு கோடி ரூபாய் பணம் இருப்பதாகவும் அதனைப் பெற்றுக் கொண்டு பத்து கோடி கருப்புப் பணம் கேட்டு ராஜபாளையத்திற்கு வரச் சொன்னதாகவும், பின்னர் 1 வது எதிரி கூறியதன் பேரில் புகார்தாரர் நல்லமலை ராஜபாளையம் பஸ்ஸ்டாண்டிற்கு வந்ததாகவும், அதே நாள் 29.02.2016 அன்று 17.00 மணிக்கு 1,2 வது எதிரிகளும், 4 முதல் 11 வரையான எதிரிகளும் மேற்படி பேருந்து நிறுத்தத்தில் வைத்து நல்லமலை பணம் தராவிட்டால் அவரைக் கொலை செய்ய வேண்டும் என்ற சதித்திட்டம் தீட்டி அதே நாள் 19.30 மணிக்கு நல்லமலையையும் அவருடைய ஓட்டுனரான ராஜபாண்டியன் என்ற ஜெகதீசையும் கடத்திக் கொண்டு தட்டப்பாறையில் உள்ள 3 வது எதிரியின் தோட்டத்திற்கு கூட்டி வந்ததாகவும், மேற்படி இடத்தில் வைத்து 1,2,3 மற்றும் 4 வது எதிரிகள் நல்லமலையை அசிங்கமான வார்த்தைகாளல் திட்டியதாகவும், அப்போது நல்லமலை 2 வது எதிரியை நோக்கி துப்பாக்கியால் சுட்டுகாயம் ஏற்படுத்தியதாகவும், இதனால் கோபம் கொண்ட மற்ற எதிரிகள் நல்லமலையையும், ராஜபாண்டியன் என்ற ஜெகதீசையும் அவர்களது சட்டையைக் கழற்றி கைகளைக் கட்டி, 1,3 மற்றும் 6 முதல் 11 வது எதிரிகள் மேற்படி இருவரையும் ஊத்துமலையிலுள்ள ஆஞ்சநேயர் கோவிலுக்கு கிழக்குப் பக்கம் உள்ள மலைக்கு கூட்டிச் சென்று, 6 வது எதிரியை யாராவது வருகிறார்களா என்று கவனிக்கச் சொல்லியும், 8 வது எதிரியை 3 வது எதிரியின் தோட்டத்தில் காருடன் இருக்கச்

சொன்னதாகவும், பின்னர் 1,3,6,7,9 முதல் 11 வது எதிரிகள் நல்லமலையையும், ராஜபாண்டி என்ற ஜெகதீசையும் கொலை செய்ய வேண்டும் என்று சட்டவிரோதமாக ஒன்று கூடி, இருவரையும் 20 அடி துரம் மலையை நோக்கி இழுத்துச் சென்று சட்டவிரோதமாக அடைத்து வைத்தும், 23.45 மணிக்கு 3 வது எதிரி அருவாளால் நல்லமலையின் வலது தோள்பட்டை, புஜத்தில் வெட்டியும், 3 வது எதிரி ராஜபாண்டி என்ற ஜெகதீசின் கழுத்து, வலது தோள்பட்டை, கீழ் தாடை, தலையின் இடது பக்கம் ஆகிய இடங்களில் அருவாளால் வெட்டியும், 6 வது எதிரி ராஜபாண்டி என்ற ஜெகதீசை அருவாளால் முதுகு, கழுத்து, வலது தோள்பட்டையில் வெட்டியும், 7 வது எதிரி ராஜபாண்டி என்ற ஜெகதீசை கத்தியால் மார்பின் வலது பக்கம், முதுகின் வலது மற்றும் இடது பக்கம் ஆகிய இடங்களில் குத்தி காயங்களை ஏற்படுத்தி அவருக்கு சம்பவயிடத்திலேயே இறப்பினை ஏற்படுத்தியதாகவும், நல்லமலை கொடுங்காயங்களுடன் எதிரிகளிடமிருந்து தப்பிவிட்டதாகவும் எனவே எதிரிகள் இதச பிரிவுகள் 147, 148, 120(பி), 364, 294(பி), 307, 302, 342, 149 ன் கீழ் குற்றம் புரிந்துள்ளதாக அரசு தரப்பு வழக்கு,

**11)** அரசு தரப்பில் எதிரிகள் மீதான குற்றச்சாட்டினை நிரூபிப்பதற்காக 12 சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு 57 சான்றாவணங்களும், 12 சான்றுப் பொருட்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசு தரப்பு வழக்கின்படி இவ்வழக்கில் புகார்தாரான நல்லமலை என்பவருக்கு காயம் ஏற்பட்டுள்ளது என்பது மருத்துவர் அ.சா.6 ன் சாட்சியம் மூலமும், அவர் வழங்கியுள்ள அ.சா.ஆ.30 விபத்து பதிவேடு நகல், அ.சா.ஆ.31 காயச்சான்று மூலமும் அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளது. மேலும் இவ்வழக்கில் இறந்து போன நபர் ராஜபாண்டி என்ற ஜெகதீசன் என்பது அவரது தாயாரான அ.சா.7 மற்றும் அவரது மனைவியான அ.சா.8 ன் சாட்சியத்தின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மேற்படி ராஜபாண்டி என்ற ஜெகதீஷின் இறப்பு இயற்கையான ஒன்றா? அல்லது கொலை செய்யப்பட்டுள்ளரா? என்பதனை ஆராயும்போது இறந்த நபரின் பிரேதத்தினை பிரேதப் பரிசோதனை செய்த மருத்துவர் அ.சா.9 திரு.செல்வமுருகன் பிரேதப் பரிசோதனையின்போது பிரேதத்தில் வெட்டுக்காயம், குத்துக்காயங்கள் மொத்தம் 15 இருந்ததாகவும், இறந்த நபர் கழுத்தின் முன்பகுதியில் ஏற்பட்டிருந்த வெட்டுக் காயங்களினால் இறந்திருக்கலாம் என்று கருத்து கூறி பிரேதப் பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ 34 வழங்கியதாக சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.ஆ.42 பிரேதப விசாரணை அறிக்கையிலும் பிரேதத்தின் கழுத்தில் வெட்டுக் காயங்களும், முதுகிலும், மார்பிலும் குத்துக்காயங்கள் இருந்ததாக கூறப்பட்டுள்ளது. எனவே

மேற்படி சாட்சியம் மற்றும் சான்றாவணங்களிலிருந்து இறந்து போன ராஜபாண்டியன் என்ற ஜெகதீஷின் மரணம் இயற்கையான ஒன்று அல்ல என்பதும், அவர் கொலை செய்யப்பட்டுள்ளார் என்பதும் அரசு தரப்பினால் சந்தேகத்திற்கப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாக இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது. இந்நிலையில், மேற்படி ராஜபாண்டியன் என்ற ஜெகதீஷ் இறப்பிற்கும், அ.சா.1 ற்கு ஏற்பட்டதாகக் கூறப்படும் காயத்திற்கும் அரசு தரப்பில் கூறப்படுவது போல் எதிரிகள்தான் காரணம் என்பதை அரசு தரப்பு சாட்சியங்கள், சான்றாவணங்கள், சான்றுப் பொருட்கள் வாயிலாக நிரூபணம் செய்துள்ளதா? என்பதை பரிசீலனை செய்ய வேண்டியதாக உள்ளது.

12) அரசு தரப்பில் வழக்கின் புகார்தாரரான நல்லமலை அ.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில் இறந்துபோன ராஜபாண்டி என்ற ஜெகதீஷ் என்ற நபரை தனக்கு தெரியாது, எதிரிகளைத் தெரியாது, 7.8 வருடங்களுக்குமுன்பு ஒரு நாள் உசிலம்பட்டியிலிருந்து ஆலங்குளத்திற்கு ஒரு நண்பரைப் பார்க்க வந்ததாகவும், வரும் வழியில் ஊத்துமலைக்கு அருகே காரில் வந்த தனக்கு ஒரு சிறு விபத்து ஏற்பட்டது என்றும், மருத்துவமனையில் இருந்தபோது போலிசார் வந்து விசாரித்ததாகவும், தன்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து தன்னுடையது கிடையாது என்றும், புகாரை தான் கொடுக்கவில்லை என்றும், வழக்கு சம்பவம் பற்றி தனக்கு தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார். அரசு தரப்பில் வேறு சம்பவத்தை நேரடியாக கண்ணுற்ற சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. அ.சா.2 வெங்கிடசாமி, அ.சா.3 சரவணன் ஆகியோர்கள் சம்பவத்தை கேள்விப்பட்ட சாட்சிகளாக அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டிருந்தாலும், அவர்களும் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காமல் பிறழ் சாட்சிகளாக மாறியுள்ளார்கள். அ.சா.7 திருமதி.அம்சமணி, அ.சா.8 திருமதி.தீபா ஆகியோர்கள், முறையே இறந்து போன ராஜபாண்டியன் என்ற ஜெகதீஷின் அம்மா மற்றும் மனைவி ஆவார்கள். அவர்கள் இறந்த போன நபர் அ.சா.1 உடன் கொடைக்கானலுக்கு சென்றது பற்றியும், பின்னர் அ.சா.1 நல்லமலை அ.சா.8 க்கு போன் செய்து மருத்துவமனையில் இருப்பதாகக் கூறியதன் பேரில் அங்கு சென்றபோது அவரையும், அ.சா.8 ன் கணவரையும் 10 பேர்கள் தாக்கியதாக கூறியதாகவும், பின்னர் ஊத்துமலை போலிசார் கூறியதன் பேரில் சம்பவயிடம் சென்று இறந்து போன நபரை அடையாளம் காண்பித்தது பற்றியும் சாட்சியம் அளித்துள்ளார்கள். மேற்படி சாட்சிகளின் சாட்சியம் அரசுதரப்பு வழக்கிற்கு ஆதரவாக, எதிரிகளையும், வழக்கு குற்ற சம்பவத்தையும் இணைக்கும் விதமாக இல்லை.

13) இந்நிலையில், எதிரிகளையும், குற்ற சம்பவத்தையும் இணைக்கும் விதமாக புலன்விசாரணை அதிகாரியால் எதிரிகள் கைது செய்யப்பட்டபோதும், அவர்கள் ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கும்போதும், அதன் அடிப்படையில் வழக்குச் சொத்துக்கள் கைப்பற்றப்பட்டபோதும் உடனிருந்ததாக அ.சா.4 திரு.தர்மராஜ், கிராம உதவியாளர் மற்றும் அ.சா.5 திருமதி. மகாலட்சுமி, கிராம உதவியாளர் விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள். அ.சா.4 தனது முதல் விசாரணை சாட்சியத்தில் அரசு தரப்பு வழக்கினை ஒத்து சாட்சியம் அளித்திருந்தாலும், குறுக்கு விசாரணையில் தான் இந்த வழக்கு விசாரணைக்காக காவல் நிலையத்திற்கு சென்றபோது முதல் விசாரணையில் சொன்ன சான்றுப் பொருட்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளர் பாதுகாப்பில் இருந்தது என்றும், அந்த சான்றுப் பொருட்களை சரிபார்த்த பின்பு அத்தாட்சிகளில் கையெழுத்து போட்டதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். அதே போல் அ.சா.5 திருமதி. மகாலட்சுமி தனது முதல் விசாரணையில் 03.06.2016 அன்று காலையில் 11 மணியளவில் தான் ஊத்துமலை கிராம உதவியாளராக பணிபுரிந்தபோது, ஊத்துமலை காவல் ஆய்வாளர் கொலை வழக்கு சம்பந்தமாக நடைபெற்று வரும் விசாரணை தொடர்பாக காவல்நிலையத்திற்கு வரச் சொன்னதன் பேரில் தானும், கிராம நிர்வாக அலுவலரும் காவல் நிலையம் சென்றதாகவும், காவல்நிலையத்தில் தெய்வசுந்தரபாண்டியன் இருந்ததாகவும், தான் ஜெகதீசன் என்பவருடைய கொலை வழக்கு தொடர்பாக போலிசார் தயார் செய்த ஆவணங்களில் கையெழுத்து செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும் குறுக்கு விசாரணையில், தாங்கள் சென்ற பிறகுதான் போலிசார் மேற்படி ஆவணங்களை தயார் செய்தார்கள் என்றும், மேற்படி ஆவணங்களில் என்ன எழுதப்பட்டுள்ளது என்ற விவரம் தனக்கு தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார். இந்நிலையில், அ.சா.12 ஆய்வாளர் தனது சாட்சியத்தில் இந்த வழக்கில் அ.சா.4, அ.சா.5 முன்பு எதிரிகளைக் கைது செய்து, ஒப்புதல் வாக்குமூலம் பெற்று, வழக்குச் சொத்துக்களை அவர்கள் அடையாளம் காட்டிய இடத்திலிருந்து கைப்பற்றியதாக சாட்சியம் அளித்துள்ளார். ஆனால், அ.சா.4, அ.சா.5 காவல்நிலையத்தில் வைத்து அத்தாட்சிகளில் கையொப்பம் செய்ததாக மேற்கண்டவாறு சாட்சியம் அளித்துள்ளார்கள். மேலும் இந்த வழக்கில் அ.சா.12ன் சாட்சியத்தின்படி எதிரிகள் வெவ்வேறு தேதிகளில், வெவ்வேறு இடங்களில் அதாவது சுரண்டை, வீ.ரெட்டியார்பட்டி, ஜங்ஷன் பஸ்ஸ்டாண்ட் போன்ற மக்கள் நடமாட்டம் நிறைந்த இடத்தில் கைது செய்யப்பட்டதாக உள்ள நிலையில், அந்தந்த இடங்களில் உள்ள தனி நபர்கள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்படாமல், எல்லா ஒப்புதல் வாக்குமூலமும் அ.சா.4, அ.சா.5ன் முன்பு பெறப்பட்டதாக

சாட்சியம் அளித்துள்ளது நம்பகத்தன்மை வாய்ந்ததாகவும், நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளத்தக்கதாகவும் இல்லாமலும், அரசு தரப்பு வழக்கினை சந்தேகம் கொள்ளச் செய்யும் வகையிலும் அமைந்துள்ளது. மேற்படி சந்தேகம் அ.சா.4, அ.சா.5 ன் மேற்படி சாட்சியம் மூலம் மேலும் உறுதியூட்டப்படுவதாகவே உள்ளது. எனவே இந்த வழக்கில் எதிரிகள் கைது, ஒப்புதல் வாக்குமூலம் பெற்றது, வழக்குச் சொத்துக்கள் அத்தாட்சியில் கைப்பற்றப்பட்டது குறித்து அரசு தரப்பு வழக்கு நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளத்தக்க வகையில் நிரூபணம் செய்யப்படவில்லை. என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**14**) மேற்படி சாட்சிகள் நீங்கலாக விசாரணை செய்யப்பட்டுள்ள அ.சா.10 திரு.குத்தாலிங்கம், தலைமைக் காவலர் பிரேதத்தை பிரேதப் பரிசோதனைக்கு ஒப்படைத்தது குறித்தும், வழக்குச் சொத்துக்களை தடய அறிவியல் துறைக்கு ஒப்படைத்தது குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.11 திருமதி. சாந்தி, உதவி ஆய்வாளர், வழக்கு பதிவு செய்தது குறித்தும், அ.சா.12 உதவி ஆய்வாளர் வழக்கு புலன் விசாரணை குறித்து, அதாவது பார்வை மகஜர், வரைபடம் தயார் செய்தது, பிரேத விசாரணை செய்து அறிக்கை தயார் செய்தது குறித்தும், எதிரிகள் கைது, ஒப்புதல் வாக்குமூலம் பெற்று, அத்தாட்சியில் வழக்குச் சொத்துக்களை கைப்பற்றியது குறித்தும், வழக்குச் சொத்துக்களை பகுப்பாய்விற்கு அனுப்ப வேண்டுகோள் கடிதம் கொடுத்தது குறித்தும், வழக்கில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்த ஆய்வாளர் திரு.குமரேசனின் புலன் விசாரணை குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி சாட்சிகளின் சாட்சியம், சான்றாவணங்களை உறுதியூட்டும் செய்யும் வகையில் தனி நபர் சாட்சியம் அமையவில்லை. வழக்கின் புகார்தாரர் நல்லமலை பிறழ் சாட்சியாக மாறியுள்ளார். சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகளாக அரசு தரப்பில் எந்த சாட்சியும் விசாரணை செய்யப்படவில்லை. விசாரணை செய்யப்பட்டுள்ள அ.சா.2 , அ.சா.3 மற்றும் அ.சா.7, அ.சா.8 ஆகியோர்கள் சம்பவத்தை கேள்விப்பட்ட சாட்சிகள். அவர்களில் அ.சா.2, அ.சா.3 பிறழ் சாட்சிகளாக மாறியுள்ளார்கள். எதிரிகள் கைது, ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் வழக்குச் சொத்துக்கள் கைப்பற்றப்பட்டது உரிய சாட்சி, சான்றாவணங்கள் வாயிலாக இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 27 ன் கீழ் நிரூபிக்கப்படவில்லை. எதிரியையும், குற்ற சம்பவத்தையும் இணைக்க எந்த நேரடி, சாட்சியமும் இல்லை. இந்நிலையில் மருத்துவர்கள் சாட்சியம், சான்றாவணங்களின்படி அ.சா.1 க்கு காயம் ஏற்பட்டுள்ளது என்பதும், இறந்த நபரின் மரணம் இயற்கையானதாக இல்லை என்பதும் அறிய முடிந்தாலும், மேற்படி அ.சா.1 ற்கு ஏற்பட்ட காயத்திற்கும், ராஜபாண்டியன் என்ற ஜெகதீஷ் என்பவரின் இறப்பிற்கும் எதிரிகள்தான்

காரணம் என்பதை அரசு தரப்பு தகுந்த சாட்சியங்கள், சான்றாவணங்கள், சான்றுப் பொருட்கள் வாயிலாக சந்தேகத்திற்கப்பாற்பட்டு, நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளக்கூடிய அளவில் நிரூபணம் செய்யவில்லை என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே சந்தேகத்தின் பலன் எதிரிகளுக்கு கிடைக்கக்கூடியதாக உள்ளது என்றும் முடிவுசெய்கிறது.

**15)** முடிவாக 1 வது எதிரியை இதச பிரிவுகள் 120(பி) உ/இ 302, 120(பி) உ/இ 364, 364, 294(பி)(2 எண்ணிக்கை), 120(பி) உ/இ 302, 147, 148 உ/இ 149, 341, 294(பி)(2 எண்ணிக்கை) உ/இ 149, 307 உ/இ 149, 302 உ/இ 149 கீழும், 2 வது எதிரியை இதச பிரிவுகள் 120(பி) உ/இ 302, 120(பி) உ/இ 364, 364, 294(பி)(2 எண்ணிக்கை) கீழும்,3 வது எதிரியை இதச பிரிவுகள் 294(பி)(2 எண்ணிக்கை), 120(பி) உ/இ 302, 120(பி) உ/இ 302, 147, 148, 341, 294(பி)(2 எண்ணிக்கை), 307, 302 கீழும்,4 வது எதிரியை இதச பிரிவுகள் 120(பி) உ/இ 302, 120(பி) உ/இ 364, 364, 294(பி)(2 எண்ணிக்கை) உ/இ 149 கீழும், 5 வது எதிரியை இதச பிரிவுகள் 120(பி) உ/இ 302, 120(பி) உ/இ 364, 364, 294(பி)(2 எண்ணிக்கை) உ/இ 149 கீழும்,6 வது எதிரியை இதச பிரிவுகள் 120(பி) உ/இ 302, 120(பி) உ/இ 364, 364, 294(பி)(2 எண்ணிக்கை) உ/இ 149, 120(பி) உ/இ 302, 147, 148, 341, 294(பி)(2 எண்ணிக்கை) உ/இ 149, 307, 302 கீழும்,8 வது எதிரியை இதச பிரிவுகள் 120(பி) உ/இ 302, 120(பி) உ/இ 364, 364, 294(பி)(2 எண்ணிக்கை) உ/இ 149, 120(பி) உ/இ 302, கீழும்,9 வது எதிரியை இதச பிரிவுகள் 120(பி) உ/இ 302, 120(பி) உ/இ 364, 364, 294(பி)(2 எண்ணிக்கை) உ/இ 149, 120(பி) உ/இ 302, 147, 148 உ/இ 149, 341, 294(பி)(2 எண்ணிக்கை) உ/இ 149, 307 உ/இ 149, 302 உ/இ 149 கீழும்,10 வது எதிரியை இதச பிரிவுகள் 120(பி) உ/இ 302, 120(பி) உ/இ 364, 364, 294(பி)(2 எண்ணிக்கை) உ/இ 149, 120(பி) உ/இ 302, 147, 148 உ/இ 149, 341, 294(பி)(2 எண்ணிக்கை) உ/இ 149, 307 உ/இ 149, 302 உ/இ 149 கீழும், 11 வது எதிரியை இதச பிரிவுகள் 120(பி) உ/இ 302, 120(பி) உ/இ 364, 364, 294(பி)(2 எண்ணிக்கை) உ/இ 149, 120(பி) உ/இ 302, 147, 148 உ/இ 149, 341, 294(பி)(2 எண்ணிக்கை) உ/இ 149, 307 உ/இ 149, 302 உ/இ 149 கீழும் குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து, 1 முதல் 6 மற்றும் 8 முதல் 11 வது எதிரிகளை மேற்படி பிரிவுகள் கீழான குற்றச்சாட்டுகளிலிருந்து குவிமுச பிரிவு 235(1)ன் கீழ் விடுதலை செய்து இந்த நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.

**16)** இந்த வழக்கில்இந்நீதிமன்ற பி.ஆர். 2/2024 ல் ரிமாண்ட் செய்யப்பட்டுள்ள வரிசை எண் 1 முதல் 8 ல் கண்ட சொத்துக்களை வழக்கின் மேல்முறையீட்டு காலம் அல்லது மேல்முறையீடு இருப்பின் அதற்குப் பின் அழிக்கவும், 9003891031 எண் கொண்ட ஏர்டெல் சிம்கார்டுன் கூடிய நோக்கியா கருப்புக் கலர் செல்போனையும், 8190855301 எண் கொண்ட

ஐடியா சிம்கார்டு உடைய கருப்புக் கலர் நோக்கிய செல்போனையும், வழக்கின் மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர், மேல்முறையீடு இருப்பின் அதற்குப் பின்னர் அதன் உரிமையாளர்கள் வசம் ஒப்படைக்கவும், பதிவு எண் TN 59 AH 8679 உள்ள Ford Fiesta கார் ஏற்கனவே அதன் உரிமையாளர் உமா மகேஷ்வரி, க/பெ. நல்லமலை என்பவரிடம் தென்காசி நீதித்துறை நடுவர் நீதிமன்ற கு.ப.ம.எண். 8223/2016 நாள் 24.08.2016 உத்தரவின்படி இடைக்காலமாக பிணைமுறியில் ஒப்படைக்கப்பட்டுள்ளதால் மேற்படி வாகனத்தை அவரே வைத்துக் கொள்ளவும், வழக்கின் மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர், மேல்முறையீடு இருப்பின் அதற்குப் பின்னர் பிணைமுறியை ரத்து செய்யவும், வாகனத்தின்அசல் ஆர்.சி.புத்தகத்தை உரிமையாளர் வசம் ஒப்படைக்வும், பதிவு எண் TN 72 AK 5017 உள்ள Tavera கார் ஏற்கனவே அதன் உரிமையாளர் சரவணன் என்பவரிடம் தென்காசி நீதித்துறை நடுவர் நீதிமன்ற கு.ப.ம.எண். 2388/2016 நாள் 18.03.2016 உத்தரவின்படி இடைக்காலமாக பிணைமுறியில் ஒப்படைக்கப்பட்டுள்ளதால் மேற்படி வாகனத்தை அவரே வைத்துக் கொள்ளவும் வழக்கின் மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர், மேல்முறையீடு இருப்பின் அதற்குப் பின்னர் பிணைமுறியை ரத்து செய்யவும், வாகனத்தின்அசல் ஆர்.சி.புத்தகத்தை உரிமையாளர் வசம் ஒப்படைக்கவும், பதிவு எண் TN 01 V 7975 உள்ள Indigo LS கார் ஆலங்குளம் நீதித்துறை நடுவர் நீதிமன்ற கு.ப.ம.எண். 4833/2018 நாள் 09.07.2018 தேதிய உத்தரவின்படி அதன் உரிமையாளரான மாரியப்பன், த/பெ. ஸ்ரீரங்கம் என்பவரிடம் இடைக்காலமாக பிணைமுறியில் ஒப்படைக்கப்பட்டுள்ளதால் மேற்படி வாகனத்தை அவரே வைத்துக் கொள்ளவும் வழக்கின் மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர், மேல்முறையீடு இருப்பின் அதற்குப் பின்னர் பிணைமுறியை ரத்து செய்யவும், வாகனத்தின்அசல் ஆர்.சி.புத்தகத்தை உரிமையாளர் வசம் ஒப்படைக்கவும் உத்தரவிடப்படுகின்றது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று 2026 ஆம் வருடம் மார்ச் திங்கள் 18 ம் நாளாகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்படுகின்றது.

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Date: 2026.03.23 15:43:24 +0530

கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

தென்காசி

<u>அரசு தரப்பு சாட்சிகள்</u>

அ.சா.1 திரு. நல்லமலை

அ.சா.2 திரு.வெங்கடசாமி

அ.சா.3 திரு.சரவணன்

அ.சா.4 திரு.தர்மராஜ்

அ.சா.5 திருமதி.மகாலட்சுமி

அ.சா.6 மருத்துவர். திரு. அன்பு, திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை

அ.சா.7 திருமதி.அம்சமணி

அ.சா.8 திருமதி. தீபா

அ.சா.9 மருத்துவர் திரு.செல்வமுருகன், திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை

அ.சா.10 திரு.குத்தாலிங்கம், தலைமைக் காவலர், ஊத்துமலை காவல் நிலையம்.

அ.சா.11 திருமதி.சாந்தி, உதவி ஆய்வாளர், ஊத்துமலை காவல் நிலையம்

அ.சா.12 திரு.செந்தாமரைக் கண்ணன், ஆய்வாளர்,ஊத்துமலை காவல் நிலையம்

**அரசு தரப்பு சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 05.03.2016 | 1 வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.4 ன் கையொப்பம் |
| அ.சா.ஆ.2 | 05.03.2016 | அத்தாட்சி |
| அ.சா.ஆ.3 | 09.03.2016 | 3 வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.4 ன் கையொப்பம் |
| அ.சா.ஆ.4 | 03.03.2016 | அத்தாட்சி |
| அ.சா.ஆ.5 | 06.03.2016 | 8 வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.4 ன் கையொப்பம் |
| அ.சா.ஆ.6 | 06.03.2016 | அத்தாட்சி |
| அ.சா.ஆ.7 | 06.03.2016 | 7 வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.4 ன் கையொப்பம் |
| அ.சா.ஆ.8 | 06.03.2016 | அத்தாட்சி |
| அ.சா.ஆ.9 | 12.03.2016 | 4 வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.4 ன் கையொப்பம் |
| அ.சா.ஆ.10 | 12.03.2016 | அத்தாட்சி |
| அ.சா.ஆ.11 | 19.03.2016 | 6 வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.4 ன் கையொப்பம் |
| அ.சா.ஆ.12 | 19.03.2016 | அத்தாட்சி |
| அ.சா.ஆ.13 | 14.03.2016 | 11 வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.4 ன் கையொப்பம் |
| அ.சா.ஆ.14 | 14.03.2016 | அத்தாட்சி |
| அ.சா.ஆ.15 | 05.03.2016 | 1 வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.4 ன் கையொப்பம் |
| அ.சா.ஆ.16 | 09.03.2016 | 3 வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.4 ன் கையொப்பம் |
| அ.சா.ஆ.17 | 06.03.2016 | 8 வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.4 ன் கையொப்பம் |
| அ.சா.ஆ.18 | 06.03.2016 | 7 வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.4 ன் கையொப்பம் |
| அ.சா.ஆ.19 | 12.03.2016 | 4 வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.4 ன் கையொப்பம் |
| அ.சா.ஆ.20 | 19.03.2016 | 6 வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.4 ன் கையொப்பம் |
| அ.சா.ஆ.21 | 14.03.2016 | 11 வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.4 ன் கையொப்பம் |
| அ.சா.ஆ.22 | 14.03.2016 | அத்தாட்சியில் உள்ள அ.சா.5 ன் கையொப்பம் |
| அ.சா.ஆ.23 | 19.03.2016 | அத்தாட்சியில் உள்ள அ.சா.5 ன் கையொப்பம் |
| அ.சா.ஆ.24 | 05.03.2016 | அத்தாட்சியில் உள்ள அ.சா.5 ன் கையொப்பம் |

அ.சா.ஆ.25 06.03.2016 அத்தாட்சியில் உள்ள அ.சா.5 ன் கையொப்பம்

அ.சா.ஆ.26 06.03.2016 அத்தாட்சியில் உள்ள அ.சா.5 ன் கையொப்பம்

அ.சா.ஆ.27 09.03.2016 அத்தாட்சியில் உள்ள அ.சா.5 ன் கையொப்பம்

அ.சா.ஆ.28 09.03.2016 அத்தாட்சியில் உள்ள அ.சா.5 ன் கையொப்பம்

அ.சா.ஆ.29 12.03.2016 அத்தாட்சியில் உள்ள அ.சா.5 ன்கையொப்பம்.

அ.சா.ஆ.30 01.03.2016 விபத்து பதிவேட்டு நகல்

அ.சா.ஆ.31 ---- காயச்சான்று

அ.சா.ஆ.32 05.03.2016 பிரேதப் பரிசோதனை வேண்டுகோள் கடிதம்

அ.சா.ஆ.33 31.03.2016 உள்ளுறுப்பு அறிக்கை

அ.சா.ஆ.34 05.03.2016 பிரேதப்பரிசோதனை அறிக்கை கருத்துரையுடன்

அ.சா.ஆ.35 வரிசை கடவுச் சீட்டுகள் (2 எண்ணம்)

அ.சா.ஆ.36 01.03.2016 புகார்வாக்குமூலம்

அ.சா.ஆ.37 01.03.2016 அச்சுமுதல் தகவலறிக்கை

அ.சா.ஆ.38 01.03.2016 பிரிவு மாற்றல் அறிக்கை

அ.சா.ஆ.39 05.03.2016 எதிரி தெய்வசுந்தரபாண்டியன் என்ற தெய்வத்தின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி.

அ.சா.ஆ.40 05.03.2016 பார்வை மகஜர்

அ.சா.ஆ.41 05.03.2016 மாதிரிவரைபடம்

அ.சா.ஆ.42 05.03.2016 பிரேத விசாரணைஅறிக்கை

அ.சா.ஆ.43 05.03.2016 அத்தாட்சி

அ.சா.ஆ.44 05.03.2016 பிரிவு மாற்றல் அறிக்கை

அ.சா.ஆ.45 06.03.2016 எதிரி சபரிசெல்வம் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின்அனுமதிக்கப்பட்ட பகுதி

அ.சா.ஆ.46 06.03.2016 எதிரி மாரியப்பன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின்அனுமதிக்கப்பட்ட பகுதி

அ.சா.ஆ.47 வரிசை-- படிவம் 91(5 எண்ணம்)

அ.சா.ஆ.48 09.03.2016 எதிரி கணபதிபாண்டியன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி

அ.சா.ஆ.49 09.03.2016 அத்தாட்சி

அ.சா.ஆ.50 12.03.2016 எதிரி மாரியப்பன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி

அ.சா.ஆ 51 14.03.2016 எதிரி விஷ்ணு கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி

அ.சா.ஆ.52 19.03.2016 எதிரி வெள்ளத்துரை கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி

அ.சா.ஆ.53 19.04.2018 மரபணு பரிசோதனை அறிக்கை

அ.சா.ஆ.54 28.04.2016 வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திலிருந்து பெறப்பட்ட ரசாயண பரிசோதனைஅறிக்கை

அ.சா.ஆ.55 -- உயிரியல்அறிக்கை வேண்டுகோள் கடிதம்

அ.சா.ஆ.56 -- மண்டையோடு பரிசோதனை செய்ய வழங்கப்பட்ட சூப்பர் இம்போசிஷன் வேண்டுகோள் கடிதம்

அ.சா.ஆ.57 வரிசை-- படிவம் 91(5 எண்ணம்)

**<u>அரசு தரப்பு சான்று பொருட்கள்-</u>**

சா.பொ.1 டி .என். 59 ஏஹெச் 8679 பியஸ்டா காரின் புகைப்படம்

சா.பொ.2 அருவாள்

சா.பொ.3 டி.என்.72 ஏகே 5017 டவேரா காரின் புகைப்படம்

சா.பொ4 கத்தி

சா.பொ.5 டி.என்.01 வி 7975 இண்டிகோ காரின் புகைப்படம்

சா.பொ.6 அருவாள்

சா.பொ.7 செல்போன்

சா.பொ.8 ரத்தக்கறை படிந்த முண்டா பனியன்

சா.பொ.9 ரத்தக்கறை படிந்த புளுநிற ஜட்டி

சா.பொ.10 ரத்தம்பட்ட மண்

சா.பொ.11 ரத்தம்படாத மண்

சா.பொ.12 ரத்தம்படிந்த புல்

**<u>எதிரிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்றுபொருள்கள்-- இல்லை</u>**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Date: 2026.03.23 15:43:35 +0530

கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

தென்காசி

கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்

தென்காசி

அமர்வு வழக்கு எண். 230/2019

தீர்ப்புரை

நாள் 18.03.2026

வரைவு/நேரிய